# பெப்ரவரி – 01 – வியாழன்

**புனித ஹென்றி மூர்**

**அனைத்துலகும் போகும் வழியே நானும் போகிறேன்.**
**1 அர. 2:2**

## முதல் வாசகம் : 1அரசர்2:1-4.10–12

தாவீதின் இறுதி நாள் நெருங்கினபோது அவர் தம் மகன் சாலமோனுக்குப் பணித்துக் கூறியது இதுவே. ”அனைத்துலகும் போகும் வழியே நானும் போகிறேன். நீ நெஞ்சுறுதியும் வீரமும் கொண்டவனாயிரு.உன் கடவுளாகிய ஆண்டவரின் ஆணைகளைக் கடைப்படி. அவர் காட்டும் வழியில் நட. மோசேயின் சட்ட நூலில் எழுதப்பட்டுள்ள கடவுளுடைய நியமங்கள், விதிமுறைகள், நீதிச் சட்டங்கள், ஒழுங்கு முறைகள் ஆகியவற்றைக் கடைப்பிடி. இப்படிச் செய்தால், நீ செய்யும் காரியங்களிலும் செல்லும் இடங்களிலும் வெற்றி காண்பாய்.ஏனெனில் ஆண்டவர் என்னை நோக்கி, “உன் மைந்தர்கள் தங்கள் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் என் முன்னிலையில் உண்மையுடன் நடப்பார்களானால், இஸ்ரயேலின் அரியணையில் அமர்வதற்கேற்ற ஒருவன் அவர்களுள் இல்லாமல் போவதில்லை“ என்று எனக்குக் கொடுத்த வாக்கு அப்போதுதான் நிலைத்திருக்கும்.பின்னர் தாவீது தம் மூதாதையருடன் துயில் கொண்டு, தாவீதின் நகரில் அடக்கம் செய்யப்பட்டார்.தாவீது இஸ்ரயேலின்மீது ஆட்சி செலுத்திய காலம் நாற்பது ஆண்டுகள். அவர் எபிரோனில் ஏழு ஆண்டுகளும் எருசலேமில் முப்பத்து மூன்று ஆண்டுகளும் ஆட்சி செலுத்தினார்.சாலமோன் தம் தந்தை தாவீதின் அரியணையில் அமர்ந்தார். அவருடைய ஆட்சி உறுதியாக நிலைநாட்டப்பட்டது.

**பதில்பாடல் :** ஆண்டவரே அனைத்தையும் ஆள்பவர் நீரே

## நற்செய்தி : மாற்கு 6:7-13

அக்காலத்தில் இயேசு பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்து, அவர்களை இருவர் இருவராக அனுப்பத் தொடங்கினார். அவர்களுக்குத் தீய ஆவிகள் மீது அதிகாரமும் அளித்தார். மேலும், ”பயணத்திற்குக் கைத்தடி தவிர உணவு, பை, இடைக்கச்சையில் செப்புக் காசு முதலிய வேறு எதையும் நீங்கள் எடுத்துக் கொண்டு போக வேண்டாம்.ஆனால் மிதியடி போட்டுக் கொள்ளலாம் அணிந்திருக்கும் அங்கி ஒன்றே போதும்” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்.மேலும் அவர், ”நீங்கள் எங்கேயாவது ஒரு வீட்டுக்குள் சென்றால், அங்கிருந்து புறப்படும்வரை அவ்வீட்டிலேயே தங்கியிருங்கள்.உங்களை எந்த ஊராவது ஏற்றுக் கொள்ளாமலோ உங்களுக்குச் செவி சாய்க்காமலோ போனால் அங்கிருந்து வெளியேறும் பொழுது, உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்” என்று அவர்களுக்குக் கூறினார்அப்படியே அவர்கள் புறப்பட்டுச் சென்று மக்கள் மனம் மாற வேண்டுமென்று பறைசாற்றினார்கள்பல பேய்களை ஓட்டினார்கள் உடல் நலமற்றோர் பலரை எண்ணெய் பூசிக் குணப்படுத்தினார்கள்.

**தியானம்:** எமது வாழ்வானது மாற்றமடைந்து இறைவன் எமக்கு கொடுத்த கட்டளைகளையும், நியமங்களையும் கடைப்பிடித்து வாழ்வோமேயானால் எமக்கு ஏற்படும் துன்பங்கள், வேதனைகள், ஏமாற்றங்கள், அவமானங்கள் எதுவாக இருந்தாலும் யாவற்றையம் அவரே பார்த்துக்கொள்வார் என்று உறுதியுடன் வாழ இன்றைய வாசகங்கள் எமக்கு கூறிநிற்கின்றது. அன்று தாவீது அரசனானவன் இவ்வுலகை விட்டு பிரியும் நேரத்தில் கூறியபடியே சாலமோன் கடவுளுடைய, கட்டளைகளையும் நியமங்களையும் ஏற்று வாழ்ந்ததால்தான் அவன் இறைவனின் சித்தப்படி அரசனானான். இன்று நாங்களும் இறைவனது கட்டளைகளை நியமங்களைக் கடைப்பிடித்து அவரது அழைப்பை எற்றுக்கொண்டு வாழ அழைக்கப்பட்டுள்ளோம். இவ்வாறு வாழ்ந்து வந்தோமேயானால் அன்று இயேசு சீடர்களை தெரிந்தெடுத்து பேய்களை ஓட்டவும், நோய்களைக் குணமாக்கவும் அதிகாரம் கொடுத்தாரோ அதேபோன்று எமக்கும் பல அதிகாரங்களையும் கொடுத்து அனுப்புவார். இன்று நாங்கள் இறைவனுக்கேற்ற வாழ்க்கை வாழாததால் யாவற்றையும் இழந்து விடுகின்றோம். காரணம் எமது பாவப்பழக்கவழக்கங்களும், தீயசிந்தனைகளுமே. இவற்றினாலேதான் எமக்கு துன்பங்கள், சோதனைகள், கஸ்டங்கள் போன்று பலவகை ஏற்படுகின்றன. அவ்வேளையில் எவ்வகையான விசுவாசத்துடன் இருந்தாலும் கடவுள் எனக்குத்தான் சோதனையைக் கொடுக்கின்றார், கடவுளுக்கு கண்ணில்லையா? என்று இறைவனையே குறைகூறிவிடுகின்றோம். ஆனால் இறைவன் எமக்கு தண்டிப்பதற்காக அல்ல மாறாக எம்மைத் திருத்தி அவரது பிள்ளைகளாக மாற்றவே எமக்கு கொடுக்கின்றார். அவ்வாறு வாழ்ந்தோமேயானால் அன்று சீடர்களுக்கு அதிகாரங்களையும் கொடுத்தாரோ அதேபோன்று எங்களுக்கும் கொடுத்து, மற்றவர்களை தன்னுடன் இணைத்துக்கொள்ள அனுப்பிவிடுவார். எனவே அவ்வற்புதமான அழைப்பை ஏற்றுக்கொண்டு அவர்பணிபுரிய எமது வாழ்வை மாற்றியமைப்போம்.